KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: **10.63300/kijts603112026.41**

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

சங்க இலக்கிய அறநூல்கள் காட்டும் கற்றல் நெறிகள்: வாழ்வைக் கலையாக்கும் கல்விச் சிந்தனைகள்

Learning Traditions in Sangam and Didactic Tamil Literature: Educational Thought that Turns Life into an Art

க. வசந்தகுமாரி[1,*iD], முனைவர் மு. ஹேமலதா[2iD]

[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு – 638 012.

[2] நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு – 638 012.

***Corresponding author:** க. வசந்தகுமாரி, kvasanthk0206@gmail.com

ORCID iD: க. வசந்தகுமாரி https://orcid.org/0009-0000-6365-5117 · முனைவர் மு. ஹேமலதா https://orcid.org/0009-0001-2269-1768

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0020

Peer review
Double-blind peer review

Keywords
Sangam Literature
Thirukkural
Naladiyar
Muthamizhkaanchi (Mudhumozhikanchi)
Learning Methodology
Tamil Education
Virtue (Aram)
Mother Tongue Education

ABSTRACT

Human life is filled with emotions. For those who know how to express these emotions with proportion and subtlety, life transforms into an art. However, life does not always flow like a clear stream; unexpected obstacles occasionally intervene. True education provides the strength to face these with calmness, a smile, and skill. Today's society has turned life into a battlefield and stands having lost itself. In this context, this article examines how Sangam literature and ethical texts (Aram Noolgal) defined education suited for life. This study categorizes it into five paths: moral education coupled with teacher worship (reverence), education that took place in the mother tongue and natural environment, education towards equality, science and technology education, and education in the enjoyment of art.

How to cite this article: க. வசந்தகுமாரி, & முனைவர் மு. ஹேமலதா (2026). சங்க இலக்கிய அறநூல்கள் காட்டும் கற்றல் நெறிகள்: வாழ்வைக் கலையாக்கும் கல்விச் சிந்தனைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 1–10. https://doi.org/10.63300/kijts603112026.41
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

உணர்வுகளால் நிரம்பியது மனித வாழ்க்கை. அவ்வுணர்வுகளை அளவோடும் நுட்பத்தோடும் வெளிப்படுத்தத் தெரிந்தவருக்கு வாழ்க்கை ஒரு கலையாக மாறுகிறது. ஆனால் வாழ்க்கை எந்நாளும் தெளிந்த நீரோடையாக ஓடுவதில்லை; எதிர்பாராத இடர்கள் இடையிடையே குறுக்கிடுகின்றன. அவற்றை அமைதியோடும் புன்னகையோடும் திறமையோடும் எதிர்கொள்ளும் ஆற்றலைத் தருவதே உண்மையான கல்வி. இன்றைய சமூகம் வாழ்க்கையைப் போர்க்களமாக்கித் தன்னையே இழந்து நிற்கிறது. இச்சூழலில், வாழ்வுக்கு ஏற்ற கல்வியைச் சங்க இலக்கியமும் அறநூல்களும் எவ்வாறு வரையறுத்தன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. ஆசிரியர் வழிபாட்டுடன் கூடிய ஒழுக்கக் கல்வி, தாய்மொழியிலும் இயற்கைச் சூழலிலும் நிகழ்ந்த கல்வி, சமத்துவம் நோக்கிய கல்வி, அறிவியல்–தொழில்நுட்பக் கல்வி, கலையின்பக் கல்வி என்னும் ஐந்து நெறிகளாக இவ்வாய்வு பகுத்துக் காண்கிறது.

திறவுச் சொற்கள்: சங்க இலக்கியம், திருக்குறள், நாலடியார், முதுமொழிக்காஞ்சி, கற்றல் நெறி, தமிழர் கல்வி, அறம், தாய்மொழிக் கல்வி

1. முன்னுரை

தமிழர் தம் மரபு நீண்டது; பிற இனத்தாரும் மதித்துப் போற்றும் தன்மையது. பல நூற்றாண்டுகளாக வாழும் முறையைத் தாமும் கற்று, அடுத்த தலைமுறைக்கும் கற்பித்து வந்த சமூகம் இது. தாங்கள் உழைத்துப் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் ஒவ்வொரு தனிமனிதனும் பெற்று நற்குடிமகனாக உயர வேண்டும் என்பதே முன்னோரின் விருப்பமாக இருந்தது. அந்த விருப்பம் நிறைவேறக் கல்வி இன்றியமையாதது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால்தான் சங்க இலக்கியங்களையும், அவற்றைத் தொடர்ந்து அறநூல்களையும் படைத்து, மக்களை நெறிப்படுத்தும் பணியை மேற்கொண்டனர்.

மனிதனைப் பிற உயிர்களிடமிருந்து பிரித்து உயர்த்திக் காட்டுவது கல்வியே என்ற கருத்தை அண்மைக்கால ஆய்வுகளும் வலியுறுத்துகின்றன. நீதி நூல்கள் கல்வியை அழியாத செல்வமாகவும், பிறவிப் பயனை அடையும் வழியாகவும், ஞானத்தை நோக்கிய பயணமாகவும் காட்டுகின்றன என்று கீதா (2024) விளக்குகிறார். மனிதன் பெறக்கூடிய முதல் செல்வம் கல்வி; அது அறிவின் வாயிலைத் திறக்கும் கருவி; வலிய பகைவரிடமிருந்தும் துன்பங்களிடமிருந்தும் அவனைக் காப்பது என்று திருக்குறளை முன்வைத்து வீலா (2022) குறிப்பிடுகிறார். இக்கருத்துகளைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டு, சங்க காலத்திலும் அறநூல் காலத்திலும் தமிழர் பின்பற்றிய கற்றல் நெறிகளை வகைப்படுத்தி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. ஆய்வு நோக்கமும் அணுகுமுறையும்

சங்க இலக்கியங்களும் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களும் கல்வியை எந்தெந்தக் கோணங்களில் அணுகின என்பதைக் கண்டறிதல், அந்நெறிகள் இன்றைய கல்விச்

சூழலுக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை மதிப்பிடுதல் ஆகிய இரண்டும் இவ்வாய்வின் முதன்மை நோக்கங்கள். புறநானூறு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, நன்னூல் ஆகியன முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. பாடல்களைத் தொகுத்து வகைப்படுத்தும் பகுப்பாய்வு முறையும், அவற்றின் பொருளை இன்றைய சூழலோடு இணைத்து விளக்கும் விளக்கமுறைத் திறனாய்வும் இங்குக் கையாளப்பட்டுள்ளன. அண்மைக் காலத் தமிழ் ஆய்விதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் துணைச் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. முந்தைய ஆய்வுகள் – ஒரு மீளாய்வு

பழந்தமிழ் இலக்கியங்களில் கல்வியும் அறமும் குறித்துக் கடந்த சில ஆண்டுகளில் கணிசமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றை மூன்று போக்குகளாகப் பகுத்துக் காணலாம். முதல் போக்கு, திருக்குறளை மையமாகக் கொண்டு அறம், கல்வி, மனிதநேயம் ஆகியவற்றை ஆராய்வது. வீலா (2022), இரமேஷ் (2022) ஆகிய இருவரும் திருக்குறளின் அறச்சிந்தனைகளைத் தனித்தனியே ஆராய்ந்துள்ளனர்; முன்னவர் கல்வியை அறத்தோடு இணைத்துக் காண, பின்னவர் குறளின் கருத்துகள் அன்றாட வாழ்வோடு கொண்டுள்ள பிணைப்பை முன்னிறுத்துகிறார். இந்துபாலா (2022) திருக்குறளின் கல்விச் சிந்தனையைத் தனியாக ஆராய்ந்துள்ளார். வீரத்தமிழன் (2026) குறளின் மனிதநேயக் கூறுகளான அன்பு, அருள், ஈகை, கொல்லாமை ஆகியவற்றை விளக்குகிறார். விஷ்ணுப்பிரியா (2026) நிர்வாகவியல் நோக்கிலும், சென்னப்பன் (2026) தகவல் தொழில்நுட்ப நோக்கிலும் திருக்குறளை மறுவாசிப்புச் செய்துள்ளனர்.

இரண்டாம் போக்கு, அறநூல்களை ஒப்பீட்டு நோக்கில் அணுகுவது. நாலடியாரையும் திருக்குறளையும் ஊழ் என்ற கருத்தாக்கத்தின் வழி ஒப்பிட்டு, சமண–பௌத்தச் சிந்தனைகள் அவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பிரேம்குமார் (2022) ஆராய்கிறார். திருக்குறளிலும் பிற நீதிநூல்களிலும் அறிவுடைமை பெறும் இடத்தைக் கிரேசி (2025) விளக்குகிறார். நீதி நூல்கள் காட்டும் கல்வியை அழியாச் செல்வம், கற்றல் நெறி, ஆசிரியர் பங்கு, ஞானக்கல்வி எனப் பல உட்தலைப்புகளில் கீதா (2024) தொகுத்துரைக்கிறார். இவ்வாய்வுக்கு மிக நெருக்கமான முன்னோடிக் கட்டுரையாக இதனைக் கொள்ளலாம்.

மூன்றாம் போக்கு, சங்க இலக்கியத்தைச் சமூகவியல், அறவியல், அறிவியல் நோக்குகளில் மறுவாசிப்புச் செய்வது. சங்கத் தமிழரின் வாழ்வியல் விழுமியங்களை ஜான்சி ராணி (2024) தொகுத்துக் காட்ட, சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்களைத் தனலட்சுமி மற்றும் கிருஷ்ணன் (2025) விளக்குகின்றனர். புறநானூற்றைச் சமூகப் பரிணாம நோக்கில் புவனேஸ்வரி மற்றும் இரவிச்சந்திரன் (2025) ஆராய்ந்துள்ளனர். சங்கப் பாடல்களில் பொதிந்துள்ள அறிவியல் கருத்துகளை அமலா கார்த்திகா (2023) வெளிக்கொணர்கிறார். தமிழாய்வின் போக்குகளையும் வாய்மொழியிலிருந்து எழுத்துக்கு நிகழ்ந்த மாற்றத்தையும் கண்ணதாசன் (2025) வரலாற்று நோக்கில் தொகுத்துள்ளார். குறள் வாசிப்பைக் கற்பித்தல் உத்தியாகப் பயன்படுத்தும்

வகுப்பறை ஆய்வைச் சுத்ரமணியன் மற்றும் வெங்கடாசலம் (2021) மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாய்வுகள் கல்வியையும் அறத்தையும் தனித்தனியே விரிவாக ஆராய்ந்திருந்தாலும், சங்க காலம் முதல் அறநூல் காலம் வரையிலான கற்றல் நெறிகளை ஒருசேர வகைப்படுத்தி, அவற்றை இன்றைய கல்விச் சூழலோடு பொருத்திக் காட்டும் முயற்சி குறைவாகவே உள்ளது. அவ்விடைவெளியை நிரப்பும் சிறு முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

4. கல்வி, கற்றல் – சொற்பொருள் விளக்கம்

'கல்வி' என்பது தூய தமிழ்ச் சொல். இதனைக் 'கல் + வி' எனப் பிரித்துக் காண்பர். 'கல்' என்னும் வேர்ச்சொல்லுக்குத் தோண்டுதல், அகழ்ந்தெடுத்தல், வெளிக்கொணர்தல் என்னும் பொருள்கள் உண்டு. மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் திறன்களை அகழ்ந்து மேலே கொண்டுவந்து, ஒருவனை நல்ல மனிதனாக உருவாக்குவதே கல்வி என்பது இச்சொல்லின் உட்பொருள். அதே வேரிலிருந்து 'கல் + தல்' என்ற முறையில் 'கற்றல்' என்னும் தொழிற்பெயர் பிறக்கிறது. எனவே கல்வியும் கற்றலும் ஒன்றையொன்று சார்ந்து பொருள்படும் சொற்களாக வழங்குகின்றன.

எந்த மனிதனும் பிறக்கும்போதே முழுமையான அறிவோடும் திறமையோடும் பிறப்பதில்லை. வாழும் நாளில் அவன் பெறும் அனுபவங்களும் பயிற்சிகளும் அவற்றின் விளைவுகளும் சேர்ந்தே அவனை வடிவமைக்கின்றன. அவ்வகையில் கற்றல் என்பது ஒரு முறை நடந்து முடியும் நிகழ்வன்று; வாழ்நாள் முழுதும் தொடரும் செயல்முறை. கல்வியின் தலையாய நோக்கம் மனிதனின் சிந்தனை ஆற்றலை வளப்படுத்துவது என்றும், அதில் மொழி முதன்மைப் பங்கு வகிக்கிறது என்றும் சுத்ரமணியன் மற்றும் வெங்கடாசலம் (2021) கூறுகின்றனர். குறள் வாசிப்பின் வழி மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியும் என்பதை அவர்களது ஆய்வு காட்டுகிறது.

5. கற்றலின் படிநிலை வளர்ச்சி

உளவியலாளர் மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டை ஒத்து, மனிதனின் கற்றலும் படிப்படியாக வளர்ந்தது எனலாம். முதலில் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் அவன் கற்றான். பின்னர் வலிமையான சமுதாயத்தைக் கட்டியெழுப்பத் தொழில்நுட்பக் கல்வியை நோக்கித் திரும்பினான். தொழில்நுட்பத்தில் வெற்றி கண்டு வாழ்க்கையை எளிதாக்கிக் கொண்ட பின், நுண்ணறிவுக் கல்வியையும் இன்று செயற்கை நுண்ணறிவையும் தன்வசப்படுத்தி வானையும் மண்ணையும் ஆளும் நிலைக்கு உயர்ந்துள்ளான். ஒரு கண்டுபிடிப்பின் முடிவு அடுத்ததன் தொடக்கமாக அமைவதால், கற்றல் என்பது முடிவில்லாப் பயணமாகவே தொடர்கிறது.

ஆனால் தமிழரின் கற்றல் நெறி வெறும் ஏட்டுக்கல்வியோடு நின்றுவிடவில்லை. மனித வாழ்வின் விழுமியங்களை உள்ளடக்கிய நீண்ட பண்பாட்டுப் பயணமாக அது

விளங்கியது. சங்கப் பாடல்கள் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, அரசியல் வாழ்வு ஆகிய அனைத்திற்குமான விழுமியங்களைப் பதிவு செய்துள்ளன என்று ஜான்சி ராணி (2024) சுட்டுகிறார். 'கற்க கசடற' என்று தொடங்கிய முன்னோரின் கல்விச் சிந்தனை சங்க காலத்திலும் அறநூல் காலத்திலும் எவ்வாறு பயணித்தது என்பதைப் பின்வரும் பகுதிகளில் விரிவாகக் காணலாம்.

6. சங்க காலமும் அறநூல் காலமும் – ஒரு பின்புலம்

கி.மு. 500 முதல் கி.பி. 300 வரையிலான காலப்பகுதியைச் சங்க காலம் என்பர். காதல், வீரம், கொடை என்னும் தனிமனித உணர்வுகளை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் வழியாகப் போற்றிப் பாடிய காலம் அது. புறநானூறு அக்கால வீரயுக வரலாற்றின் கண்ணாடியாகவும், பண்பாட்டு, அறமரபுகளின் களஞ்சியமாகவும் திகழ்கிறது; இனக்குழுச் சமூகம் நிலவுடைமைச் சமூகமாக மாறிய பரிணாமத்தையும் அது பதிவு செய்கிறது (புவனேஸ்வரி & இரவிச்சந்திரன், 2025). சங்கப் பாடல்களில் அறம் என்னும் சொல் நேர்மை, வாய்மை, நடுவுநிலை என்னும் பொருள்களில் வழங்கியதையும், கொடை, உதவி, நேரிய ஆட்சி போன்ற அறங்கள் போற்றப்பட்டதையும் தனலட்சுமி மற்றும் கிருஷ்ணன் (2025) எடுத்துக்காட்டுகின்றனர்.

சங்கம் மருவிய காலமான கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரையிலான பகுதியில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றன. வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துரைத்து, அறத்தை மிகுதியாகப் பாட வேண்டிய தேவை அக்காலச் சூழலில் எழுந்தது. அதன் விளைவாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. இக்காலத்தை 'அறநெறிக் காலம்' என்று தமிழறிஞர்கள் குறிப்பிடுவதையும், சமண–பௌத்த நெறிகள் ஊழைவிட மனித முயற்சிக்கே முதன்மை தந்ததையும் பிரேம்குமார் (2022) விளக்குகிறார். இந்நூல்களுள் திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகிய பதினொன்றும் அறநூல்களாகும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற" (குறள், 34)

வள்ளுவர் சொல்வது போல, மனித வாழ்வின் பயன் மனவளம், உடல்வளம், உயிர்வளம் என்னும் மூன்றின் இயக்கத்திலும் தங்கியுள்ளது. மனம் தெளிவாக இயங்காவிட்டால் உடலும் உயிரும் பயன் தருவதில்லை. வாழ்க்கையைச் சீரமைக்கும் எண்ணங்களை உருவாக்குவது மனமே; அம்மனத்தைச் சமுதாயத்தோடு இணக்கமாகச் செம்மைப்படுத்துவது கல்வியே. திருக்குறளின் கருத்துகள் மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை என்பதை இரமேஷ் (2022) குறிப்பிடுகிறார். இப்பின்புலத்தில் சங்கச் சான்றோரும் அறநூல் ஆசிரியர்களும் வகுத்த கற்றல் நெறிகளை ஐந்து பிரிவுகளாகக் காணலாம்.

7. ஒழுக்கமும் ஆசிரியர் வழிபாடும் சார்ந்த கற்றல் நெறி

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” (புறநானூறு, 183)

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியதாகக் கருதப்படும் இப்பாடல், கற்கும் மாணவனின் கடமைகளைத் தெளிவாக வரையறுக்கிறது. ஆசிரியருக்குத் தேவையான நேரத்தில் உதவ வேண்டும்; வேண்டிய பொருளைக் கொடுக்க வேண்டும்; அவருக்குப் பின்னால் பணிவுடன் நிற்பதை வெறுக்காமல் கற்க வேண்டும். ‘இரு’ என்றால் இருந்து, ‘சொல்’ என்றால் சொல்லி, சினம் கொள்ளாமல் அடக்கத்தோடு பயில்வதே நல்லது என்பது இதன் உட்கருத்து. கற்றலின் அடித்தளம் ஒழுக்கமே என்பது சங்கத் தமிழரின் முதன்மைக் கொள்கையாக இருந்தது.

அறநூல் காலமும் இதே நெறியைத் தொடர்ந்தது. ‘நேராமல் கற்றது கல்வி அன்று’ (முதுமொழிக்காஞ்சி, அல்ல பத்து) என்றும், ‘கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்’ (முதுமொழிக்காஞ்சி, தண்டாப் பத்து) என்றும் கூறி, ஆசிரியரை வழிபட்டு, பொருள் கொடுத்து, பணிவுடன் கற்க வேண்டும் என்பதை முதுமொழிக்காஞ்சி வலியுறுத்துகிறது. ‘ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை’ (முதுமொழிக்காஞ்சி, சிறந்த பத்து) என்ற தொடர், கற்றதைவிட ஒழுகுவதே மேலானது என்று அறிவிக்கிறது. நீதி நூல்கள் கல்வியில் ஆசிரியரின் பங்கையும், கற்றவர்க்குரிய கடமைகளையும் தனித்தனியே விளக்குகின்றன என்று கீதா (2024) குறிப்பிடுவது இங்குப் பொருந்துகிறது.

இவ்வகையில், சங்கச் சான்றோரிடையிலும் அறநூல் ஆசிரியர்களிடையிலும், கண்ணெனப் போற்றத்தகும் கல்வியைக் கற்பிக்கும் ஆசானே முதன்மையானவராகக் கருதப்பட்டார். ஆசிரியர்–மாணவர் உறவு வெறும் தகவல் பரிமாற்றமாக இல்லாமல், நம்பிக்கையும் மதிப்பும் நிறைந்த உறவாக அமைந்தது. இன்றைய வகுப்பறைகளில் இவ்வுறவு தளர்ந்து வருவதை நோக்கும்போது, இம்மரபு மீண்டும் சிந்திக்கத் தக்கதாகிறது.

8. தாய்மொழியும் இயற்கையும் சார்ந்த கற்றல் நெறி

இயற்கையோடு இயைந்து இன்பமாக வாழ்ந்த முன்னோர் தாய்மொழியாகிய தமிழின் வழியாகவே கல்வி கற்றனர். உணர்வதும் உணர்த்துவதும், புதியவற்றைப் பகுத்தறிவதும், ஆராய்வதும், எடுத்துரைப்பதும் தாய்மொழியில் நிகழும்போதுதான் முழுமை பெறும் என்பதை அவர்கள் இயல்பாகவே உணர்ந்திருந்தனர். சிந்தனைக்கு முதன்மைக் கருவி மொழியே என்ற பியாஜே, புரூனர், வைகாட்ஸ்கி போன்ற உளவியலாளர்களின் கருத்தை, குறள் கற்பித்தல் பற்றிய ஆய்வில் சுத்ரமணியன் மற்றும் வெங்கடாசலம் (2021) எடுத்துக்காட்டுவது இம்மரபின் அறிவியல் அடிப்படையை உறுதிப்படுத்துகிறது.

சங்க காலத்தில் இன்றுள்ளது போன்ற வகுப்பறைகள் இல்லை. மரநிழல், திண்ணை, பொதுமன்றம், ஆற்றங்கரை எனத் திறந்தவெளிகளே கற்கும் இடங்களாக இருந்தன. முறைசார்ந்ததும் முறைசாராததுமான கல்வி இயற்கைச் சூழலிலேயே நடந்தது.

மாணவர்கள் நூலறிவைவிட வாழ்க்கை அனுபவம், தொழில், இயற்கை நிகழ்வுகள் ஆகியவற்றிலிருந்து அதிகம் கற்றனர். சங்க இலக்கியம் பழந்தமிழர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த முறையின் பதிவாகவே அமைந்துள்ளது என்று அமலா கார்த்திகா (2023) குறிப்பிடுவது இதனோடு பொருந்துகிறது.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள், 392)

எண்ணையும் எழுத்தையும் இரு கண்களாகப் போற்றியவர்கள் தமிழர். கணக்கை எளிதாகக் கற்க நெல்லிக்காய் வாய்ப்பாடு, சிறுகுழி வாய்ப்பாடு போன்றவை பயிற்றுவிக்கப்பட்டன. மணலில் விரலால் எழுதிப் பழகும் முறையும், பின்னர் மரப்பலகையிலும் ஓலையிலும் எழுதும் முறையும் வழக்கில் இருந்தன. ஐவகை நிலங்களின் தன்மைகளை அறிந்து அவற்றுக்கு ஏற்ற தொழில்களைச் செய்யும் நடைமுறைக் கல்வியும் வலுப்பெற்றிருந்தது. கல்வி மனப்பயிற்சியாகவும் உலகியலை உணரும் கருவியாகவும் கருதப்பட்டது.

இடைக்காலத்தில் சமண, பௌத்தத் துறவியரின் செல்வாக்கால் பள்ளிகள், மடங்கள், கோயில்களோடு இணைந்த இடங்கள் கற்றல் மையங்களாக மாறின. சமண, பௌத்தத் துறவியர் சென்ற இடமெல்லாம் அம்மக்களின் தாய்மொழியைக் கற்றுக்கொண்டு, அம்மொழியிலேயே கற்பித்தனர். தமிழகத்திலும் தமிழர்க்குத் தமிழிலேயே கல்வி வழங்கினர். தாம் தங்கிய இடம், மரத்தடி, சான்றோர் அவை, கடிகை போன்ற இடங்களில் வாய்மொழிப் பயிற்சி, ஓலைச்சுவடி, மணல் எழுத்து, மனப்பாடம், கலந்துரையாடல், விவாதம் ஆகிய முறைகளைக் கையாண்டனர். சங்கப் பாடல்கள் ஓலையில் எழுதப்படுவதற்கு முன் வாய்மொழிக் கவிதைகளாகவே வழங்கின என்பதையும், வாய்மொழியிலிருந்து எழுத்துக்கு நிகழ்ந்த மாற்றத்தையும் கண்ணதாசன் (2025) தமது ஆய்வில் சுட்டுகிறார். இது அக்காலக் கற்றலில் மனப்பாடமும் செவிவழிக் கல்வியும் பெற்றிருந்த இடத்தைப் புலப்படுத்துகிறது.

"சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு" (குறள், 27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தின் இயல்புகளை ஆராய்ந்து அறிபவனின் அறிவிலேயே உலகம் அடங்கியுள்ளது என்பது வள்ளுவர் கருத்து. ஐம்புலன்களையும் நுட்பமாக இயக்கும் வகையில் இயற்கை சார்ந்த ஒருங்கிணைந்த கற்றல் அமைய வேண்டும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. இன்றைய கல்வியியல் பேசும் 'பல்புலன் கற்றல்' (multisensory learning) என்ற கருத்தோடு இது நெருங்கி நிற்பது வியப்புக்குரியது.

மாணவரின் மனப்பாங்கை அறிந்து கற்பிக்க வேண்டும் என்பதை நன்னூல் தெளிவாகக் கூறுகிறது. 'கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொள' (நன்னூல், பாயிரம், 36) என்ற நூற்பா, கற்பவனின் ஏற்கும் திறனை அறிந்து அவன் மனத்தில் பதியும்படி கற்பிப்பதே நல்லாசிரியரின் இயல்பு என்கிறது. நன்மை எது,

தீமை எது என்று பகுத்தறியும் ஆற்றல் மனிதனுக்கு இயற்கையாகவே உண்டு; அதனைத் தூண்டி வளர்க்கும் உளவியல் சார்ந்த கற்றல் நெறி அக்காலத்தில் விளங்கியது.

‘உயர்ந்த உலகம் புகும்’ (நான்மணிக்கடிகை, 27), ‘ஓதிற் புகழ்சால் உணர்வு’ (நான்மணிக்கடிகை, 101) என்ற பாடல்தொடர்கள், கற்கக் கற்க ஒருவனின் காமம், வெகுளி, மயக்கம் போன்ற புல்லறிவுகள் நீங்கி, உலக இயல்பை அறிந்து மெய்நெறியில் மனம் செல்லும் என்கின்றன.

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு” (நாலடியார், 131)

தலைமுடியின் அழகும், கரை வளைந்த ஆடையின் அழகும், மஞ்சள் பூசிய அழகும் உண்மையான அழகு ஆகா; நடுவுநிலைமையைத் தரும் கல்வியழகே அழகு என்கிறது நாலடியார். கல்வியால் சிந்தனை தெளிவடையும்போது முகத்தில் இயல்பாகவே ஒரு பொலிவு தோன்றுகிறது. அகத்தின் மாசு நீங்கப் புறத்தில் பொலிவு உண்டாவதை இயற்கையாகவே உணரலாம். ஆகவே, இயற்கையின் மேன்மையை உணர்ந்தே சங்கச் சான்றோரும் அறநூல் ஆசிரியர்களும் இயற்கை சார்ந்த கற்றலைப் போற்றினர்.

9. சமத்துவம் நோக்கிய கற்றல் நெறி

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” (புறநானூறு, 192)

கணியன் பூங்குன்றனாரின் இவ்வரி தமிழரின் உலகளாவிய பார்வைக்குச் சான்றாக எங்கும் மேற்கோள் காட்டப்படுகிறது. கல்வி சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு மட்டுமன்றி அனைவருக்கும் உரியதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் சங்க காலத்திலேயே வேரூன்றியிருந்தது. அறிவிற் சிறந்தோரைப் போற்றும் மனநிலை சமூகம் முழுதும் பரவியிருந்தது. இறைவனுக்கு நிகராகப் போற்றப்பட்ட வேந்தனையே நெறிப்படுத்தும் ஆற்றல் புலமையுடையோர்க்கு இருந்தது; அதனால் கற்றவர் மேன்மையுடையவராகக் கருதப்பட்டனர்.

“அறியாது ஏறிய என்னைத் தெறுவர” (புறநானூறு, 50)

பெருஞ்சேரல் இரும்பொறையின் அரண்மனையில், முரசு கட்டிலின் மீது அறியாது படுத்துறங்கிய மோசிகீரனார் என்னும் புலவரை, அரசன் வாளால் வெட்டாமல், அருகில் நின்று கவரி வீசினான் என்பது இப்பாடல் தரும் செய்தி. அறிவுக்குக் கிடைத்த மதிப்பை இங்குத் தெளிவாகக் காணலாம். மேலோர், கீழோர் என்ற வேறுபாட்டை விரும்பாது, அறிவு சார்ந்த சமத்துவத்தை நிலைநாட்டவே சங்க சமூகம் முயன்றது எனலாம். செல்வம், அரசுரிமை, படைவலிமை எல்லாம் இருந்தாலும், அரசர்களும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே அக்கால அரசுக் கொள்கையாக இருந்தது. திருக்குறள் வகுக்கும் நிர்வாக நெறிகளில் திட்டமிடல்,

மதிப்பீடு, காலமேலாண்மை ஆகியவற்றோடு அறிவும் அடிப்படையாக அமைவதை விஷ்ணுப்பிரியா (2026) விளக்குவது, ஆட்சியாளர்க்குக் கல்வி இன்றியமையாதது என்ற இம்மரபின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள், 397)

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறநானூறு, 183)

கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடு, எந்த ஊரும் தன் ஊர் என்கிறார் வள்ளுவர். நான்கு வருணங்களாகப் பிரிந்திருந்த சமூகத்திலும், கீழ்நிலையில் உள்ள ஒருவன் கற்றவனாக இருந்தால், மேல்நிலையில் உள்ளவனும் அவனிடம் சென்று பணிந்து கற்பான் என்கிறது புறநானூறு. சங்க காலத்தில் வருணப் பாகுபாடு நிலவியிருந்தாலும், அதனை உடைக்கும் சமத்துவக் கருவியாகக் கல்வி செயல்பட்டது என்பதை இவை புலப்படுத்துகின்றன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" (குறள், 391)

கற்பதைக் குற்றமறக் கற்க வேண்டும்; கற்ற பின் அதற்கேற்ப ஒழுக வேண்டும். சங்கக் கல்வி வெறும் தகவல்களைச் சேர்ப்பதோடு நின்றுவிடவில்லை. சமுதாயத்தை மாற்றும் செங்கோலாகவும் அது விளங்கியது. எதைக் கற்றாலும் பிழையறக் கற்று, அதனால் சமுதாயம் நலம்பெற வேண்டும் என்பதே கல்வியின் பயனாகக் கருதப்பட்டது. கல்வியும் அறமும் பிரிக்க முடியாதவை என்பதைத் திருக்குறளை முன்வைத்து வீலா (2022) விளக்குகிறார்.

"தவம்கல்வி ஆள்வினை என்றிவற்றான் ஆகும் குலம்" (நாலடியார், குடிப்பிறப்பு)

"குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று" (முதுமொழிக்காஞ்சி, சிறந்த பத்து)

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்" (குறள், 959)

நல்ல குலம், தீய குலம் என்று பிறப்பால் வேறுபடுத்துவது வெறும் சொல்லே; தவம், கல்வி, முயற்சி ஆகியவற்றை உடையவரே உயர்குடியினர் என்பது இப்பாடல்களின் சாரம். ஒருவனுக்குக் குலப்பெருமை தருவதும், இனிய சொல்லைத் தருவதும் கல்வியே. சமணச் செல்வாக்குப் பெற்ற அறநூல் ஆசிரியர்களும் சமத்துவக் கல்வியையே முன்வைத்தனர்.

"கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத் தலைநிலத்து வைக்கப் படும்" (நாலடியார், 133)

பிறப்பால் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் கற்றறிந்தவரைச் சான்றோர் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவர் என்பது இதன் பொருள். சாதி, சமயம், இனம், மொழி

என்ற எல்லைகளைக் கடந்து உலக மக்களுக்கான வாழ்வியல் நெறிகளைத் திருக்குறள் முன்வைக்கிறது என்றும், மனிதநேயத்தின் ஊற்றாகத் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன என்றும் வீரத்தமிழன் (2026) குறிப்பிடுகிறார். கல்வி வேற்றுமைகளைக் களையும் சமநிலை வித்தாகச் செயல்பட்டது என்பதை இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

10. அறிவியலும் தொழில்நுட்பமும் சார்ந்த கற்றல் நெறி

பழந்தமிழர் கல்வி இசை, நடனம் போன்ற கலைகளோடு நின்றுவிடவில்லை. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று வழங்கப்படும் பரந்த கல்விமுறையில் போர்க்கலை, கணிதம், மருத்துவம், பேச்சுத்திறன், அரசியல், உளவியல் எனப் பல துறைகள் இடம்பெற்றன. உடல், அறிவு, பண்பு ஆகிய மூன்றையும் ஒருசேர வளர்ப்பதே அதன் இலக்கு. ஒரே மனிதன் போராளியாகவும், கலைஞனாகவும், அறிஞனாகவும், தலைவனாகவும் விளங்கும் பல்திறன் மனிதனை உருவாக்கும் அறிவியலாக அக்கல்விமுறை அமைந்திருந்தது.

“ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர்யான் வாழும் ஊரே” (புறநானூறு, 191)

பிசிராந்தையார் தமக்கு நரை இல்லாததற்குக் காரணம் கூறும்போது, கல்வியால் நிறைந்து, அடங்கிய கொள்கையுடைய சான்றோர் பலர் தம் ஊரில் வாழ்வதையும் ஒரு காரணமாகக் குறிப்பிடுகிறார். பண்டைச் சமூகம் எச்செயலைச் செய்தாலும் கற்றறிந்த சான்றோரின் கொள்கைகளைப் பின்பற்றி, அவற்றின் வழியே புதிய செயல்களுக்குத் தொடக்கம் கண்டு வெற்றியடைந்தது. இயற்கையை உற்றுநோக்கி அறிவியல் சிந்தனையை வளர்த்துக்கொண்டனர். பறவையைக் கண்டு விமானமும், மீனைக் கண்டு படகும், எதிரொலியைக் கேட்டு வானொலியும் படைத்த மனிதனின் கற்பனையாற்றல், இயற்கையோடு இயைந்த கற்றலின் விளைவே.

“வலவன் ஏவா வான ஊர்தி” (புறநானூறு, 27)

ஓட்டுநர் இன்றி இயங்கும் வானவூர்தி பற்றிய இக்குறிப்பு, இன்றைய ஆளில்லா வானூர்திகள், தானியங்கி வாகனங்கள், இயந்திர இயக்கங்கள் போன்றவற்றை நினைவூட்டுகிறது. இது அக்காலத்தில் நடைமுறையில் இருந்த கருவியைக் குறிக்கிறதா, புலவரின் கற்பனையைக் குறிக்கிறதா என்பது ஆய்வுக்குரியது. எனினும் தொலைநோக்குச் சிந்தனையோடு கற்றாய்ந்த மரபு அக்காலத்தில் இருந்தது என்பதை மறுக்க இயலாது. சங்கப் பாடல்களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்தால், குறிப்பாக வானியல் சார்ந்த பழந்தமிழர் அறிவு வியப்பூட்டுவதாக உள்ளது என்று அமலா கார்த்திகா (2023) கூறுகிறார்.

“நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத் தேஎங் கொண்டு” (நெடுநல்வாடை, 76–77)

நண்பகல் நேரத்தில் இரு கோல்களை நட்டு, அவற்றின் நிழல் எப்பக்கமும் சாயாத வேளையில், சிற்பநூல் அறிந்த புலவர்கள் நுட்பமாகக் கயிறு பிடித்துத் திசைகளை

வரையறுத்து அரண்மனைக்கு அடிக்கல் நாட்டினர் என்று நெடுநல்வாடை விவரிக்கிறது. கதிரவனின் இயக்கத்தைக் கொண்டு திசையையும் நேரத்தையும் கணிக்கும் இவ்வறிவு, பழந்தமிழர் வானியலுக்கும் கட்டடக் கலைக்கும் தந்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. அக்கற்றலின் தொடர்ச்சியாகவே இன்றைய செயற்கைக்கோள், விண்வெளி நிலைய ஆய்வுகள் போன்றவற்றைக் காண வேண்டியுள்ளது.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில" (நாலடியார், 135)

கல்விக்குக் கரையில்லை; கற்பவரின் வாழ்நாளோ சில. 'கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு' என்ற பழமொழியும் இதையே சொல்கிறது. உலக இயற்கையைப் பற்றிய அறிவும் ஆய்வும் எண்ணில் அடங்காதவை என்பதை உணர்த்தி, இயற்கை சார்ந்த அறிவையும் புரிதலையும் வளர்க்கும் அறிவியல் கற்றலை இது ஊக்குவிக்கிறது. அதே பாடல், நீரை நீக்கிப் பாலை உண்ணும் அன்னப்பறவை போல, மனிதரும் தம் வாழ்க்கைக்குப் பயன்தரும் நூல்களைத் தேர்ந்து கற்க வேண்டும் என்கிறது. தொழில் சார்ந்த நூல்களையும் மனநலம் சார்ந்த நூல்களையும் கற்று, ஒவ்வொருவரும் தம் துறையில் மேம்பட்டு, பணித்திறனிலும் பொருளாதாரத்திலும் உயர வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

"வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்" (முதுமொழிக்காஞ்சி, தண்டாப் பத்து)

இத்தொடரில் வரும் 'சூழ்ச்சி' என்ற சொல்லுக்கு 'ஆராய்ச்சி' என்று உரையாசிரியர்கள் பொருள் கொள்கின்றனர். நல்ல குடும்பம், நல்ல சுற்றம், நல்ல தொழில், நல்ல வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியதே 'வாழ்க்கை'. அத்தகைய வாழ்க்கையை விரும்புபவன் தான் செய்யும் தொழிலைப் பற்றி இடைவிடாது ஆராய வேண்டும்; அப்போதுதான் அத்தொழில் மேன்மேலும் வளரும். இவ்வாறு அறநூல்களும் அறிவியல்–தொழில்நுட்பக் கற்றலை வலியுறுத்தியுள்ளன. திருக்குறள் வழங்கும் அறநெறி, மனிதநேயச் சிந்தனைகள் இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகிற்கு வழிகாட்டும் ஒளியாக அமைகின்றன என்று சென்னப்பன் (2026) குறிப்பிடுவது, இப்பழைய நெறிக்கும் இன்றைய தொழில்நுட்பக் கல்விக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது.

11. கலையின்பம் சார்ந்த கற்றல் நெறி

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்ற தேவாரத் தொடருக்கு ஏற்ப, தமிழ் இசைத்தமிழாகவும் வளம் பெற்றது. ஆடல், பாடல், சிற்பம், இசை, ஓவியம் எனக் கலைக்கல்வி பண்களோடும் ஏழு சுரங்களோடும் தழைத்தது. பிறப்பு முதல் இறப்பு வரை தமிழரின் அன்றாட வாழ்வோடு இசை கலந்திருந்தது. வாய்மொழிப் பயிற்சியில் ஓசைநயத்தைப் பின்பற்றிக் கற்றலை எளிதாக்கும் உத்தியும் வழக்கில் இருந்தது; வெண்பா, குறள் போன்ற யாப்பு வடிவங்கள் மனப்பாடத்திற்கு ஏற்றவையாக அமைந்தமை இதற்குச் சான்று.

“தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது” (குறள், 68)

“தாமின் புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்” (குறள், 399)

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றவர் மேலும் கற்க விரும்புவர் என்கிறார் வள்ளுவர். கற்றவரால் உலகமே மகிழ்கிறது என்ற இக்கருத்துக்கு நம் காலத்திலும் சான்றுகள் உண்டு. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம், ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் பயன்பட்ட இலகுவான பொருளைக் கொண்டு மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான எடை குறைந்த கால்தாங்கிகளை உருவாக்கியது இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அறிவு பிறர்நலத்தோடு இணையும்போதே முழுமை பெறுகிறது.

அறநூல் காலத்திலும் பெண் இல்லத்தின் முதன்மையாகக் கருதப்பட்டாள். தன் நற்பண்புகளாலும் தான் பெற்ற நன்மக்களாலும் அவள் சிறப்படைந்தாள். அப்பிள்ளைகளும் தாம் பெற்ற கல்வியால் தெளிவான உணர்வைப் பெற்று, அக்கல்விக்கே பெருமை சேர்த்தனர்.

“சிறந்த கொள்கை அறங்கூ றவையமும்” (மதுரைக்காஞ்சி, 492)

‘அறங்கூறு அவையம்’ என்ற பெயரில் சான்றோர் குழு அமைந்து, மக்களுக்கு அறம், பொருள், இன்பம், ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை போன்ற பண்புகளை வளர்த்து, சான்றோர் வழியில் இன்ப வாழ்வு வாழ வலியுறுத்தியதை மதுரைக்காஞ்சி காட்டுகிறது. அறநூல் காலத்திலும் இதே நெறி தொடர்ந்தது.

“நல்லறிவு நாளும் தலைப்படுவர்” (நாலடியார், 139)

மண்பானையில் உள்ள நீர், தன்னோடு சேர்ந்த பாதிரிப் பூவின் மணத்தைப் பெற்றுவிடுகிறது. அதுபோலக் கல்லாதவரும் கற்ற சான்றோரைச் சேர்ந்து ஒழுகினால், நாள்தோறும் நல்லறிவையும் கேள்வி ஞானத்தையும் பெற்று, தம் வாழ்வைக் கலையின்ப வாழ்வாக மாற்றி மணம் வீசுவர் என்கிறது நாலடியார். தனித்துத் தெளியவும், மதிப்போடு வாழவும், சமூகத்தில் உயரவும் அறிவுடைமை துணை நிற்கிறது; அகஒழுக்கம், பாதுகாப்பு, சமூக மேன்மை ஆகிய மூன்று பரிமாணங்களிலும் அறிவு தலைசிறந்த பண்பாகப் போற்றப்படுகிறது என்று கிரேசி (2025) விளக்குகிறார்.

“கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி” (நாலடியார், 256)

கற்றறிந்த சான்றோர் ஒன்றைப் பற்றிப் பேசும்போதும் செயல்படும்போதும் பிறர் மனம் புண்படாதபடி நேர்மையானவற்றையே சொல்வர். பச்சோலையைப் போலச் சலசலப்பின்றி, அமைதியான குணத்தோடு தம் கருத்தை நிலைநிறுத்துவர். இத்தகைய சான்றோரின் நட்பு வாடிய வாழ்வையும் பசுமையாக்கும். அறிவு நிரம்பிய தொழில் வல்லுநராகவும் நாகரிக மனிதனாகவும் வலம் வருவதால் மட்டும் ஒருவன்

நிறைவடைவதில்லை. கலையின்பக் கற்றல் நெறியில் வாழ்வைச் செலுத்தும்போதுதான் அவன் மனிதனாக, குழந்தையாக, தாயாக, குடிமகனாக, சான்றோனாக முழுமை பெறுகிறான். அந்நெறியைப் பின்பற்றாத மனம் நாளடைவில் வாழ்க்கையை மீளாத் துன்பமாகக் கருதிச் சோர்ந்துவிடுகிறது.

"அறிவுசோர்வு உடைமையிற் பிறிதுசோர்வு அறிப" (முதுமொழிக்காஞ்சி, அறிவுப் பத்து)

அறிவு பெறுவதில் சோர்ந்துவிட்டால், மற்ற எல்லா நிலைகளிலும் சோர்வே மிஞ்சும். மனிதன் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழலையும் செழுமைப்படுத்தும் படைப்பே கலைப்படைப்பு. மனித உணர்வுகளைச் செம்மைப்படுத்தி வாழ்வைக் கலையின்ப வாழ்வாக மாற்ற, அறவழியில் கற்கவும், பேசவும், நட்புக் கொள்ளவும், தொழில் புரியவும், பொருள் சேர்க்கவும் சங்க இலக்கியங்களும் அறநூல்களும் வழிகாட்டுகின்றன.

12. சங்க நெறியும் அறநூல் நெறியும் – ஓர் ஒப்பீடு

இரு காலக் கற்றல் நெறிகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது, தொடர்ச்சியும் மாற்றமும் ஒருசேரப் புலப்படுகின்றன. ஆசிரியரை மதித்தல், ஒழுக்கத்தைக் கல்வியின் அடிப்படையாகக் கொள்ளுதல், தாய்மொழியில் கற்றல், கல்வியால் சமூக மதிப்பு பெறுதல் ஆகியவை இரு காலத்திலும் மாறாமல் தொடர்கின்றன. சங்கப் புலவர் புறநானூற்றில் சொன்ன கருத்தையே முதுமொழிக்காஞ்சியும் நாலடியாரும் சுருக்கமான அறமொழிகளாக மீண்டும் உரைக்கின்றன.

ஆனால் அணுகுமுறையில் வேறுபாடு உண்டு. சங்கப் பாடல்கள் கல்வியை வாழ்க்கை நிகழ்வுகளின் ஊடாக, ஒரு மன்னனின் அனுபவமாகவோ ஒரு புலவரின் வாழ்க்கைச் சம்பவமாகவோ காட்டுகின்றன. மோசிகீரனார்க்குக் கவரி வீசிய நிகழ்ச்சி இதற்கு எடுத்துக்காட்டு. அறநூல்களோ அதே கருத்தை நிகழ்ச்சியிலிருந்து பிரித்தெடுத்து, எக்காலத்துக்கும் பொருந்தும் பொது விதியாக வகுத்துத் தருகின்றன. சங்க இலக்கியம் 'காட்டுகிறது'; அறநூல் 'கற்பிக்கிறது' என்று இவ்வேறுபாட்டைச் சுருக்கிச் சொல்லலாம். மேலும், சமண–பௌத்தச் செல்வாக்கால் அறநூல்களில் நிலையாமை உணர்வும், புலனடக்கமும், அறிவால் பெறும் வீடுபேறும் கூடுதல் அழுத்தம் பெறுகின்றன. 'கல்வி கரையில கற்பவர் நாள்சில' என்ற நாலடியார் வரியில் கல்வியின் பெருமையோடு வாழ்வின் நிலையாமையும் ஒருசேர ஒலிப்பது இதற்குச் சான்று.

இவ்விரு நெறிகளும் ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன. அனுபவம் சார்ந்த சங்கக் கல்வியும், விதிகளாக வகுக்கப்பட்ட அறநூல் கல்வியும் இணையும்போதுதான் தமிழரின் கல்விச் சிந்தனை முழு வடிவம் பெறுகிறது. இன்றைய கல்வியும் அனுபவக் கற்றலையும் விழுமியக் கல்வியையும் இணைத்தே செல்ல வேண்டும் என்பதற்கு இது மரபுவழிச் சான்றாக அமைகிறது.

13. இன்றைய கல்விச் சூழலுக்கான பொருத்தப்பாடு

மேற்கண்ட ஐந்து நெறிகளும் பழங்கால வரலாற்றுச் செய்திகள் மட்டுமல்ல; இன்றைய கல்விக்கும் நேரடியாகப் பொருந்துபவை. முதலாவதாக, தாய்மொழிவழிக் கல்வியின் முக்கியத்துவத்தை இன்றைய கல்விக் கொள்கைகளும் வலியுறுத்துகின்றன; பழந்தமிழர் இதனை இயல்பாகவே நடைமுறைப்படுத்தியிருந்தனர். இரண்டாவதாக, வகுப்பறையை விட்டு வெளியே சென்று இயற்கையிலும் சமூகத்திலும் கற்கும் அனுபவக் கல்வியை இன்றைய கல்வியியல் மீண்டும் கண்டடைந்து வருகிறது. மூன்றாவதாக, கற்பவனின் மனநிலையை அறிந்து கற்பிக்க வேண்டும் என்ற நன்னூலின் கருத்து, மாணவர் மையக் கல்வி என்ற இன்றைய அணுகுமுறையோடு ஒத்துப்போகிறது.

நான்காவதாக, சமத்துவக் கல்வி பற்றிய சங்க, அறநூல் சிந்தனைகள், அனைவருக்கும் கல்வி என்ற இன்றைய இலக்கிற்கு மரபு சார்ந்த அடித்தளத்தை வழங்குகின்றன. ஐந்தாவதாக, தொழில்நுட்ப வளர்ச்சி அறத்திலிருந்து விலகிவிடக் கூடாது என்ற எச்சரிக்கை இன்று முன்னெப்போதையும்விட அதிகத் தேவையாகியுள்ளது. செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் பெருகிவரும் இக்காலத்தில், ‘கற்றபின் நிற்க அதற்குத் தக’ என்ற குறள்நெறி தொழில்நுட்பக் கல்விக்கும் அறவழிகாட்டியாக அமையும். திருக்குறளும் பிற நீதிநூல்களும் இன்றைய வாழ்வியலுக்கு வழிகாட்டும் ஆற்றல் கொண்டவை என்பதைப் பல அண்மைக்கால ஆய்வுகள் (இந்துபாலா, 2022; கீதா, 2024; சென்னப்பன், 2026) உறுதிப்படுத்துகின்றன.

14. ஆய்வின் வரம்புகளும் எதிர்கால ஆய்வுக்கான பரிந்துரைகளும்

இவ்வாய்வு இலக்கியச் சான்றுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. கல்வெட்டுகள், தொல்லியல் சான்றுகள், சமணப் பள்ளிகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றை இணைத்து ஆராய்ந்தால், பழந்தமிழர் கற்றல் நடைமுறைகள் குறித்து இன்னும் உறுதியான முடிவுகளுக்கு வர இயலும். மேலும், ‘வலவன் ஏவா வானவூர்தி’ போன்ற குறிப்புகள் உண்மை நிகழ்வா, புலவரின் கற்பனையா என்பதைத் தனியே ஆராய வேண்டியுள்ளது; இலக்கியக் குறிப்புகளை அப்படியே அறிவியல் சான்றாக ஏற்பதில் எச்சரிக்கை தேவை. பதினொரு அறநூல்களில் சிலவற்றை மட்டுமே இக்கட்டுரை எடுத்தாண்டுள்ளது; ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்றவற்றின் கல்விச் சிந்தனைகள் தனி ஆய்வுக்குரியவை. இந்நெறிகளை இன்றைய வகுப்பறையில் நடைமுறைப்படுத்தி, அவற்றின் விளைவுகளைக் களஆய்வு வழி அளவிடும் கல்வியியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

15. முடிவுரை

இன்றைய கல்விமுறை பெரிதும் நவீனத் தொழில்நுட்பக் கற்றலாக உருவெடுத்துவிட்டது. இயந்திரங்களோடு இயந்திரமாக வாழும் நிலையில், அனுபவக் கற்றலுக்கான வழி அடைபட்டு வருகிறது. கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் கற்கும் ஐம்புலக் கற்றல் எங்கே போயிற்று என்ற வினா நம்முன் எழுகிறது.

சங்க காலம் முதல் அறநூல் காலம் வரையிலான கற்றல் நெறிகளை ஆராயும்போது, ஒழுக்கமும் ஆசிரியர் மதிப்பும், தாய்மொழியும் இயற்கையும், சமத்துவம், அறிவியல் ஆய்வு, கலையின்பம் ஆகிய ஐந்தும் ஒன்றோடொன்று இணைந்து ஒரு முழுமையான கல்விப் பார்வையை உருவாக்கியிருந்தன என்பது தெளிவாகிறது.

“அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந்நோய்போற் போற்றாக் கடை” (குறள், 315)

பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காக்காவிட்டால், அறிவினால் ஆகும் பயன் என்ன என்று வள்ளுவர் வினவுகிறார். பழந்தமிழர் ஒவ்வொரு கற்றலின் பின்னாலும் இந்த மனிதநேயத்தையே இறுதி இலக்காகக் கொண்டு கல்வியை நெறிப்படுத்தினர். அறிவு இரக்கமாக மலராதவரை அது முழுமை பெறாது என்ற இப்பார்வையே, வாழ்வைக் கலையாக்கும் கல்விக்கு அடிப்படை. இன்றைய கல்வி இப்பார்வையை மீட்டெடுக்குமானால், தேர்ச்சி பெற்ற மனிதர்களை மட்டுமன்றி, நிறைவான மனிதர்களையும் உருவாக்க இயலும்.

துணைநூற்பட்டியல் (References)

References

அமலா கார்த்திகா, க. [Amala Karthiga, G.]. (2023). சங்க இலக்கியம் – ஓர் அறிவியல் பார்வை . International Journal of Tamil Language and Literary Studies, 6(1), 13–24. https://doi.org/10.5281/zenodo.10121807

இந்துபாலா, இரா. [Indhubala, R.]. (2022). திருக்குறளும் கல்வியும். Shanlax International Journal of Arts, Science and Humanities, 10(S1), 45–47. https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5012

இரமேஷ், வை. [Ramesh, V.]. (2022). திருக்குறளில் அறச்சிந்தனைகள். International Research Journal of Tamil, 4(S-19), 647–651. https://doi.org/10.34256/irjt224s1997

கண்ணதாசன், வ. [Kannadasan, V.]. (2025). Traces of Tamil studies – History and values. Shanlax International Journal of Tamil Research, 9(3), 51–60. https://doi.org/10.34293/tamil.v9i3.8601

கிரேசி, த. [Gracy, T.]. (2025). The significance of wisdom in Thirukkural and ethical texts. Kalanjiyam – International Journal of Tamil Studies, 4(4), 349–361. https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/download/171/147/303

கீதா, ம. [Geetha, M.]. (2024). நீதி நூல்கள் காட்டும் கல்வி. பொன்னி நதி, 2(1), 27–31. https://imanagerpublications.com/article/22226

சுத்ரமணியன், மு., & வெங்கடாசலம், ச. [Sudramanian, M., & Vengadasalam, C.]. (2021). குறள் வாசிப்பு வழி சிந்தனைத் திறன் மேம்பாடு. Journal of Valartamil, 2(1), 117–129. https://doi.org/10.37134/jvt.vol2.1.9.2021

சென்னப்பன், மு. [Chennappan, M.]. (2026). Information technology thoughts in Thirukkural. Kalanjiyam International Journal of Tamil Studies, 6(1), 135–141. https://doi.org/10.63300/kijts06012026.02

ஜான்சி ராணி, க. [Jancy Rani, G.]. (2024). சங்ககாலத் தமிழரின் வாழ்வியல் விழுமியக்கூறுகள். International Journal of Tamil Language and Literary Studies, 7(SPL 1), 563–580. https://doi.org/10.5281/zenodo.15126223

தனலட்சுமி, வ., & கிருஷ்ணன், க. [Dhanalakshmi, V., & Krishnan, G.]. (2025). சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள். Kalanjiyam – International Journal of Tamil Studies, 4(3), 223–229. https://doi.org/10.63300/kirjts0403202509

பிரேம்குமார், இ. [Premkumar, R.]. (2022). நாலடியாரிலும் திருக்குறளிலும் ஊழ் – ஓர் ஒப்பீட்டு ஆய்வு. International Research Journal of Tamil, 4(1), 66–76. https://doi.org/10.34256/irjt2218

புவனேஸ்வரி, ம., & இரவிச்சந்திரன், ஈ. ரா. [Bhuvaneswari, M., & Ravichandran, E. R.]. (2025). The sociology and value imprints of Purananuru: An evolutionary perspective from tribal society to a land-owning system. Kalanjiyam – International Journal of Tamil Studies, 4(4), 491–502. https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/download/185/161/333

விஷ்ணுப்பிரியா, இரா. [Vishnupriya, R.]. (2026). திருக்குறளில் நிர்வாகவியல். Kalanjiyam International Journal of Tamil Studies, 4(5), 645–656. https://doi.org/10.63300/kijts04052026

வீரத்தமிழன், க. [Veerathamilan, K.]. (2026). திருக்குறளில் மனிதநேயச் சிந்தனைகள். Kalanjiyam International Journal of Tamil Studies, 5(Special Issue 5), 1–9. https://doi.org/10.63300/kijts05sp052026.01

ஷீலா, சு. [Sheela, S.]. (2022). திருக்குறளில் அறச்சிந்தனைகள் [Philosophical thoughts in Thirukkural]. International Research Journal of Tamil, 4(S-19), 166–170. https://doi.org/10.34256/irjt224s1925

பிள்ளை, கே. கே. (2002). தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நீலகண்டன், குமரி எஸ். (உரை). (2000). திருக்குறள்: எளிய உரையும் கவிதை உரையும். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.